செ.வெ.எண்.602 நாள்.24.11.2017

## காஞ்சிபுரம் மாவட்டம்

## உத்திரமேரூர், காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட 24 பள்ளிகளைச் சேர்ந்த 4373 மாணவ/மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள் வழங்கினார்.

**************

உத்திரமேரூர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் 9 மேல்நிலைப்பள்ளி மாணவ/மாணவிகளுக்கு 1313 விலையில்லா மடிக்கணினிகளை மாண்புமிகு அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள் வழங்கினார். பின்னர் காஞ்சிபுரம் அறிஞர்அண்ணா அரங்கத்தில் 15 பள்ளிகளைச் சேர்ந்த 3060 மாணவ/மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்கி பேசிய மாண்புமிகு அமைச்சர்,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய திட்டங்களில் மாணவ/மாணவிகளிடையே கல்விப் புரட்சியை உண்டாக்கிய திட்டம் தான் விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டமாகும். முன்பெல்லாம் பள்ளியில் படிக்கும் போது அடுத்த வகுப்பிற்கு தேர்ச்சி பெற்றபின் அந்த வகுப்பில் படித்த பழைய மாணவர்களின் புத்தங்களை வாங்கி படித்த காலம் தற்போது அந்த நிலை இல்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் மாணவர்கள் கல்வி கற்பதில் எந்த சிரமமும் இருக்ககூடாது என்பதை கருத்தில் கொண்டு 16 வகையான திட்டங்களை தீட்டி செயல்படுத்தினார்.

தற்போது தனியார் பள்ளிகளுக்கு இணையாக அரசுப்பள்ளிகளும், தனியார் பள்ளிகளுக்கு ஈடாக அனைத்து வசதிகளைப் பெறும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் தேர்ச்சி சதவீதமும் அரசுப்பள்ளிகளில் அதிகரித்து வருகிறது. கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும் திறமைமிக்க ஆசிரியர்களாக தேர்வு செய்யப்படுகின்றனர். ஆசிரியர்கள் தங்கள் பணியை புனிதமானதாக கருதி பணியாற்றுவதாலும் அரசும் மாணவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளிலும் எந்தவித தடையின்றி கல்வி கற்கும் வகையில் திட்டங்களை செயல்படுத்துவதால் மாணவர்கள் சிறந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளனர்.

மாணவர்களின் கல்வியறிவு முன்னேற்றத்திற்கு மடிக்கணினி முக்கிய பங்கு வகிக்கிறது. மாணவர்கள் பல உலக சம்பவங்களை இருந்த இடத்திலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. பணம் படைத்த குடும்பத்தை சார்ந்தவர்கள் மட்டுமின்றி ஏழை, எளிய குடும்பத்தைச் சார்ந்த மாணவர்களும் கல்வியறிவு பெறுவதில் சிரமம் இருக்கக்கூடாது என்பதனால்தான் மாண்புமிகு

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த சீரிய சிறப்பு மிக்க திட்டத்தை செயல்படுத்தி கல்விப்புரட்சியை ஏற்படுத்தியுள்ளார்.

மாணவர்கள் அனைவரும் தமிழக அரசின் திட்டங்களின் பயனறிந்து செயல்பட்டு கல்வியில் சிறந்து விளங்கி முன்னேற்றம் கண்டு ஒவ்வொரு மாணவனும் ஒரு இலட்சிய குறிக்கோளுடன் செயல்பட்டு எதிர்காலத்தில் உன்னத நிலையை அடைய வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.க.சுந்தர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.வி.எம்.பி.எழிலரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வாலாஜாபாத் பா.கணேசன், திரு.வி.சோமசுந்தரம், மைதிலி திருநாவுக்கரசு, திரு.காஞ்சி பன்னீர்செல்வம், முதன்மை கல்வி அலுவலர் திரு.ர.திருவளர்செல்வி, மாவட்ட கல்வி அலுவலகள், தலைமை ஆசிரியர்கள் , மாணவ/மாணவியர்கள் திரளாக பங்கேற்றனர்.

**செய்தி வெளியீடு,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**காஞ்சிபுரம்.**